**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102110

1. District : சிவகங்கை PS: ஊ.த.க.பிரிவு Year: 2023 FIR No.: 01/23 Date: 04/01/23
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a)
(ii) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம் Sections பிரிவுகள்: 409, 465, 468, 471, 477(A)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 08/02/2019 நாள் வரை 15/07/2019
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04/01/2023 நேரம் 10.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. 01 நேரம் 10.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக VR.No: 25002/2019/MISC/SG Dt. 12.11.19

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: PE 40/2020/MISC/SG
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 02 கி.மீ தொலைவில், தெற்கு
Beat Number : (b) Address : மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்
முறைக் காவல் எண் முகவரி நலன் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. ஜேசுதாஸ் (b) Father's/ Husband's Name : ரத்தினம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 43 நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
தொழில் காவல் ஆய்வாளர் முகவரி சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்),
செல்வி. திரு. ர/வை. இராதாகிருஷ்ணன்,
முன்னாள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்.
சிவகங்கை. சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
முதனிலை விசாரணை முடிந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

———

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..A. கண்ணன்.. பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [illegible]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04/01/2023

Name: பெயர் R. ஜெசுதாஸ்
Rank: நிலை ...................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
தொழில் நுட்ப மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை.

கனம் சிறப்பு நீதிபதி அவர்கள், ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அய்யா,

சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் கண்காணிப்பு அறிக்கையின்படி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அவர்களது குறிப்பாணை எண்.PE.40/2020/MISC/SG. நாள் 12.08.2020ன் பிரகாரம் குற்ற அலுவலர் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பான முதனிலை விசாரணையின் தொடர்ச்சியாக இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை எண். PE.40/2020/MISC/SG, Dt:25.11.2022ன்படி காலம் 7ல் கண்ட எதிரி மீது குற்ற எண்.0[illegible]/2023, சட்டப்பிரிவுகள் 13 (2) உ/இ 13 (1) (a) ஊழல் தடுப்பு சட்டம், 1988 மற்றும் சட்டப்பிரிவுகள் 409, 465, 468, 471, 477 (A) இந்திய தண்டனை சட்டத்தின்படி 04.01.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கின் விவரமானது,

திருமதி.கீதா என்பவர் தற்போது வேலூர் மாவட்டத்தில் கோகோ மற்றும் கபடி வீரர்களுக்கு பயிற்றுநர் (Coach) ஆக பணிபுரிந்து வருகிறார். இதற்கு முன்பு இவர் 08.02.2019ம் தேதி முதல் 15.07.2019 வரை சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை ந.க.எண்.15165/இ.எம்.2/2018, நாள் 08.01.2019ன்படி 2018-2019ம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவில் நடத்திடவும், தடகளம், நீச்சல், கூடைப் பந்து, வாலிபால், கபாடி, ஜிம்னாஸ்டிக், பளுதூக்குதல், கைப்பந்து, பூபந்து, மற்றும் டேபிள் டென்னிஸ் ஆகிய போட்டிகளை இருபாலருக்கும் நடத்த வேண்டும் என்றும் பல்வேறான அறிவுரைகளை வழங்கி அவற்றை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்து, செலவீனங்கள் மேற்கொள்ள அந்தந்த மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலக வங்கிக்கணக்கில் ரூபாய் 8,70,000/- வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட போட்டிகளில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மாநில அளவிலான முதலமைச்சர்

கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அதற்கு முன்பு மூன்று நாட்கள் பயிற்சி முகாம் நடத்த வேண்டும் என்றும் அதன் பிறகு மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்து அதற்காக ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு 200 ரூபாய் விகிதம் 3 நாட்களுக்கு ரூபாய் 600 செலவு செய்து கொள்ளவும், இருப்பிட வசதி அமைத்துக்கொள்ளவும் மொத்த தொகையில் பயிற்சி முகாம் நடத்துவதற்கு மட்டும் ரூபாய் 1,23,400/- அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை ந.க.எண்.15165/இ.எம்.2/2018, நாள் 08.01.2019ன் உத்தரவிற்கிணங்க சிவகங்கை மாவட்டத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் கூடுதல் பொறுப்பில் இருந்த திரு.பிரபு அவர்கள் தகுந்த முன்னேற்பாடுகளையும், முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு 2018-2019ம் ஆண்டிற்கான மாவட்ட முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை 05.02.2019 முதல் 07.02.2019 வரை பயிற்றுநர்கள் மூலம் நடத்தி முதல் பரிசு பெற்ற 189 வீரர்கள் மற்றும் வீராங்கணைகளை தேர்வு செய்துள்ளார். அதன் பிறகு 08.02.2019ம் தேதி செல்வி.R.கீதா என்பவர் சிவகங்கை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலராக பொறுப்பேற்றுக்கொண்டதால் அன்றைய தினமே 2018-2019ம் ஆண்டிற்கான மாவட்ட முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்திய பதிவேடுகள் மற்றும் செலவீனங்கள் சம்மந்தமான அறிக்கையை செல்வி.R.கீதா அவர்களிடம் ஒப்படைத்தும், திரு.பிரபு அவர்கள் பதவி உயர்வு பெற்று திருச்சி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலராக பணி பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

08.02.2019ம் தேதி சிவகங்கை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலராக பணிப்பொறுப்பேற்ற செல்வி.R.கீதா அவர்கள் 2018-2019ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் முடிந்த பிறகு மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வீரர் மற்றும் வீராங்கணைகளுக்கு பயிற்சி முகாம் நடத்தாமலும் அதற்கான செலவீனங்கள் எதுவும்

மேற்கொள்ளாமலும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பணம் எதுவும் வழங்காமல் பணம் பெற்றுக்கொண்டதாக பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ள Acquaintance Roll-ல் வீரர் மற்றும் வீராங்கனைகளைப் போல் போலியாக கையெழுத்து போட்டுள்ளார்.

மேலும் Hand Ball போட்டிக்கு பயிற்சி அளித்ததற்கு சம்பளமாக திரு.V.கார்த்திக் என்பவருக்கு ரூபாய் 16,800/- க்கு காசோலை வழங்கப்பட்டு பணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டதும், அதே நாளில் பூபந்து போட்டிக்கு பயிற்சி அளித்ததற்கு சம்பளமாக திரு. பால்பாண்டித்துரை என்பவருக்கு ரூபாய் 12,000/- க்கு காசோலை வழங்கப்பட்டதும் பயிற்சி அளிக்காத தங்களுக்கு அந்தப் பணம் வேண்டாம் என கூறி வங்கியிலிருந்து எடுத்து வந்து மேற்கண்ட இருவரும் எதிரி செல்வி.R.கீதா அவர்களிடம் ஒப்படைத்துள்ளனர் அதுமட்டுமல்லாது பல்வேறு போட்டிகளுக்கு பயிற்சி முகாம் நடத்தியதாக 14.02.2019ம் தேதி செல்வி.R.கீதா அவர்கள் தனது பெயரில் சுயமாக (Self) காசோலை எழுதி ரூபாய் 94,600/- வங்கியிலிருந்து எடுத்து அவற்றை முன்பணப்பதிவேடு மற்றும் செலவுப்பதிவேடு ஆகியவற்றில் பதிவுசெய்து முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார்.

எதிரி செல்வி. R.கீதா, முன்னாள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், சிவகங்கை என்பவர் 2018-2019ம் ஆண்டுக்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, அதில் தேர்வு செய்யப்பட்ட 189 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிக்கு தயார்படுத்தும் விதமாக 3 நாட்கள் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பயிற்சி முகாம் நடத்தாமல், பயிற்சி முகாம் நடத்தியதாக பொய்யான ஆவணங்கள் புனைந்து, அரசை ஏமாற்றும் நோக்கத்தோடு, நம்பிக்கை மோசடி செய்து போலியான ஆவணங்களை உண்மையான ஆவணங்கள் போல் காண்பித்து முறைகேட்டில் ஈடுபட்டு ஆகமொத்தம் ரூபாய் 1,23,400/-ஐ கையாடல் செய்துள்ளார்.

மேலும் எதிரி ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 2(c)ன் படி பொது ஊழியர் ஆவார். மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய 17(A) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018ன்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இயக்குநர் அவர்களிடமிருந்து RC.No.9067/HR-1/2019, dated 07.11.2022ன் பிரகாரம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே எதிரி செல்வி.கீதா, முன்னாள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், சிவகங்கை அவர்கள் தனது அலுவலக பணியின் பொழுது சுயலாபத்திற்காக தெரிந்தே விதிமுறைகளை மீறி தன்னிச்சையாக பொது ஊழியர் என்ற முறையில் தன் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைக்கப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் நம்பிக்கை மோசடி செய்து முறைகேட்டில் ஈடுபட்டு அரசுப்பணத்தை கையாடல் செய்தும், பொய் ஆவணங்கள் புனைந்தும் அதை உண்மையான ஆவணமாக பயன்படுத்தியும், ஆவணங்களை திருத்தம் செய்தும், குற்றமுறு எண்ணத்தில் குற்றம் புரிந்துள்ளார். ஆகையால், எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 409, 465, 468, 471, 477(A)-படியும் மற்றும் 13(2) r/w 13(1)(a) PC Act, 1988 Amendment PC Act 2018-ன்படியும் வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் அசலை ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ர. ஜேசு 4/4/2023

(ர.ஜேசுதாஸ்)

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,

சிவகங்கை.